**|b09291 53lawreF (English)**

**|c09291_000_53lawre.xml (Task 178467)**

*|v1*

ஞாயிறு மதியக் கூட்டம்

*|v2*

பொது மாநாடு

*|v3*

ஞாயிறு மதியக் கூட்டம்

*|v4*

அக்டோபர் 3, 2010

*|v5*

துணிச்சலான பிள்ளை வளர்ப்பு

*|v6*

ஆசாரியத்துவம்

*|v7*

குடும்பம்

*|v8*

பிள்ளைகள்

*|v9*

பரிசுத்த ஆவி

*|v10*

கீழ்ப்படிதல்

|v11

பொது மாநாடு

|v12

துணிச்சலான பிள்ளை வளர்ப்பு

|v13

மூப்பர் லாரி ஆர். லாரன்ஸ்

|v14

எழுபதின்மர்

|v15

பேசுவதற்கு பயப்படாத, அதில் உறுதியாய் நிற்கும் தாய்மார்களிடமிருந்தும் தகப்பன்மார்களிடமிருந்தும் வருகிற துணிச்சலான பிள்ளை வளர்ப்பே உண்மையில் உலகத்திற்கு தேவையாயிருக்கிறது.

|v16

இன்று, நான் குமரப் பருவத்தினரின் பெற்றோர்களுக்காக பேச விரும்புகிறேன் . உங்களின் துடிப்பான ஆற்றல்மிக்க இளமையே சபையின் வருங்காலமாயிருக்கிறது. அந்தக் காரணத்தால் அவர்களே பொல்லாங்கனுக்கு முக்கிய குறியாயிருக்கிறார்கள். அநேக விசுவாசமிக்க தாய்மார்களும் தகப்பன்மார்களுமாகிய நீங்கள் இந்த முக்கியமான ஆண்டுகளில் உங்கள் பிள்ளைகளை வழிநடத்துவதற்குதவ பதில்களுக்காக ஜெபித்து, இன்று மாநாட்டு உரையை கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். எனது மூத்த பேரப்பிள்ளைகள் சமீபத்தில் குமரப்பருவத்தை அடைந்திருக்கிறார்கள், ஆகவே இந்த காரியம் எனக்கு மிக முக்கியமாயிருக்கிறது. குறைபாடுகளில்லாத பெற்றோர்களுமில்லை, எளிதான பதில்களுமில்லை, ஆனால் நாம் சார்ந்திருக்க முடிகிற சத்தியத்தின் கொள்கைகளிருக்கின்றன.

|v17

2010 ஆம் ஆண்டுக்கான இளம் ஆண்கள் மற்றும் இளம் பெண்களின் பரஸ்பர கருத்து, யோசுவா புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. “பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே” (யோசுவா 1:9). அப்படியே, வேதங்களிலுள்ள இந்த வாக்கியம் பெற்றோருக்கும் ஒரு நல்ல கருத்தாயிருக்கிறது. பேசுவதற்கு பயப்படாத, அதில் உறுதியாய் நிற்கும் தாய்மார்களிடமிருந்தும் தகப்பன்மார்களிடமிருந்தும் வருகிற துணிச்சலான பிள்ளை வளர்ப்பே உண்மையில் இந்த

கடைசி நாட்களில் உலகத்திற்கு தேவையாயிருக்கிறது..

|v18

உங்கள் மகள் ஒரு இரயில் தண்டவாளத்தில் உட்கார்ந்திருப்பதாகவும், இரயில் வருகிற சத்தம் உங்களுக்குக் கேட்பதாகவும் ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள். தண்டவாளத்திலிருந்து வெளியேற அவளை நீங்கள் எச்சரிக்கமாட்டீர்களா? அல்லது நீங்கள் மிகுந்த பாதுகாப்பாக இருப்பதாக அவள் நினைக்கக்கூடுமென நீங்கள் தயங்குவீர்களா? உங்களின் எச்சரிக்கையை அவள் உதாசீனப்படுத்தினால் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு உடனேயே அவளை மாற்றமாட்டீர்களா? நிச்சயமாக நீங்கள் செய்வீர்கள்! உங்கள் மகளின்மீது நீங்கள் கொண்ட அன்பு பிற எல்லா சிந்தனைகளையும் மேற்கொள்ளும். அவளது தற்காலிகமான நல்லெண்ணத்தைவிட அவளது உயிரையே நீங்கள் மேலாக கருதுவீர்கள்.

|v19

ஒரு வேகமான இரயில் வண்டியின் வேகத்துடனும் சக்தியுடனுமே நமது குமரப்பருவத்தினர்மீது சவால்களும் சோதனைகளும் வருகின்றன. குடும்ப பிரகடனத்தில் நமக்கு நினைவுபடுத்தப்படுகிறதைப்போல தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு பெற்றோர் பொறுப்பாவார்கள். அதாவது ஆவிக்குரிய பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாகவும்.

|v20

வழிவிலகிப்போன தனது மகனுக்கு ஆல்மா இளையவர் ஆலோசனையளிப்பதைப்பற்றி மார்மன் புத்தகத்தில் நாம் படிக்கிறோம். சோரோமியர்கள் மத்தியில் ஊழியம் செய்தபோது கொரியாந்தன் சில மோசமான தவறுகளைச் செய்தான். பிரச்சினையைப்பற்றி நேரடியாகப் பேசுமளவுக்கு ஆல்மா அவனை நேசித்தான். அவனது மகன் ஒழுக்கக்கேடாக இருந்ததற்காக அவன் ஆழ்ந்த ஏமாற்றமடைந்து, பாவத்தின் மோசமான விளைவுகளைப்பற்றி அவனுக்கு அவன் விவரித்தான்.

|v21

ஆல்மாவிடமிருந்து வந்த இந்த துணிவான வார்த்தைகளை நான் படிக்கும் ஒவ்வொரு முறையும் நான் உணர்த்தப்படுகிறேன்: “உன் பிள்ளைகள் நன்மையைச் செய்யக் கட்டளையிடு என்று கர்த்தருடைய ஆவி என்னிடம் சொல்லிற்று. ஆகவேதான், என் குமாரனே, உன் அக்கிரமங்களைவிட்டு ஒயவேண்டுமென்று தேவ பயத்தோடுகூட உனக்குக் கட்டளையிடுகிறேன்” (ஆல்மா 39:12). ஆரம்பத்திலேயே அவனது தகப்பனின் இந்த தலையீடு கொரியாந்தனுக்கு ஒரு திருப்புமுனையாக மாறிற்று. அதன்பிறகு அவன் மனந்திரும்பி உண்மையாக ஊழியம் செய்தான் (ஆல்மா 42:31, 43:1-2).

|v22

ஆல்மாவின் எடுத்துக்காட்டுக்கு மாறாக வேதங்களிலுள்ள மற்றொரு தகப்பன் பழைய ஏற்பாட்டின் ஏலியாகும். சாமுவேல் தீர்க்கதரிசியின் இளமைப் பருவத்தின்போது, இஸ்ரவேலில் ஏலி பிரதான ஆசாரியனாய் ஊழியம் செய்தான். "அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும் அவர்களை அடக்காமற்போனதினால்" (1சாமுவேல் 3:13) கர்த்தர் அவனை மிகமோசமாகக் கடிந்துகொண்டாரென வேதங்கள் விவரிக்கிறது. ஏலியின் குமாரன் மனந்திரும்பவேயில்லை, அவர்களின் முட்டாள்தனத்தால் இஸ்ரவேல் முழுவதும் துன்பத்திற்குள்ளாகியது. தங்கள் பிள்ளைகளை நேசிக்கிற பெற்றோர்கள் அவர்களால் அடக்கப்படுவதைப் பொறுத்துக்கொள்ள முடியாதென்பதை ஏலியின் கதை நமக்குப் போதிக்கிறது.

|v23

"பிள்ளை வளர்ப்பு ஒரு விளம்பர போட்டியல்ல"2.என அநேக ஆண்டுகளுக்கு முன் பொது மாநாட்டில் மூப்பர் ஜோ.ஜெ. கிறிஸ்டென்சன் நமக்கு நினைவூட்டினார். அதே உற்சாகத்தில் மூப்பர் ராபர்ட் டி. ஹேல்ஸ் சொன்னார்: "சில சமயங்களில், நமது பிள்ளைகளை குற்றப்படுத்துகிறோமோ என்ற பயத்தில் அவர்களுக்கு ஆலோசனையளிக்க பயந்து அவர்களுக்கு நாம் பயப்படுகிறோம்"3.

|v24

சில ஆண்டுகளுக்கு முன்பு எங்களின் 17 வயது மகன் ஒரு வார இறுதி விடுமுறை பயணத்திற்கு, தனது நண்பர்களுடன் போக விரும்பினான். அவர்கள் எல்லோருமே நல்ல பையன்கள். போவதற்கு அவன் அனுமதி கேட்டான். சரி என்று சொல்ல விரும்பினேன் ஆனால் அந்த பயணத்தைப்பற்றி எனக்கு மனஅமைதியில்லை. நான் நினைத்ததைப்பற்றி எனது மனைவியிடம் சொன்னேன், அவள் அதை ஒத்துக்கொண்டாள். "அந்த எச்சரிக்கையின் குரலுக்கு நாம் செவிகொடுக்கவேண்டும்" என அவள் சொன்னாள்.

|v25

எங்களின் மகன் மிகவும் ஏமாற்றமடைந்து அவன் போவதை நாங்கள் ஏன் விரும்பவில்லை என்று கேட்டான். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை என நேர்மையாக நான் பதிலளித்தேன். "நீ போவதில் எனக்கு மனஅமைதி இல்லை, நான் உன்னை அதிகமாக நேசிப்பதால் உள்மனதில் எழுகிற இந்த நினைவுகளை என்னால் உதாசீனப்படுத்த முடியவில்லை" என நான் விளக்கினேன்.

|v26

நாம் நினைப்பதைவிட இளம் பிராயத்தினர் புரிந்துகொள்கிறார்கள் ஏனெனில் அவர்களுக்கும் பரிசுத்த ஆவியின் வரமிருக்கிறது. அவர் பேசும்போது அவரை அடையாளம் காண அவர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். நமது

*மாதிரியை அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். "எதைப்பற்றியாவது அவர்களுக்கு நல்லுணர்வில்லை என்றால்" அதை விட்டுவிடுவது நல்லதென்ற அவர்கள் பெறுகிற உணர்த்துதல்களுக்குக் கவனம் செலுத்த நம்மிடமிருந்து அ வர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.*

*|v27*

*பெற்றோர்களாக தீர்மானங்களை எடுக்கும்போது கணவன்மார்களும் மனைவி மார்களும் ஒற்றுமையாயிருப்பது மிக முக்கியமானது. பெற்றோர்களில் யாரா வது எதைப்பற்றியாவது நல்லுணர்வு இல்லையென்றால் அதற்கு அனுமதியளி க்கக்கூடாது. ஒரு திரைப்படம், ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி, ஒரு வீடியோ விளையாட்டு, ஒரு விருந்து, ஒரு உடை, ஒரு நீச்சல் உடை அல்லது ஒரு இ ணையதள நிகழ்ச்சி ஆகியவற்றைப்பற்றி ஒருவர் நன்றாக உணரவில்லையென் றால் ஒருவருக்கொருவருக்கு ஒத்துழைக்க துணிவடைந்து அதை தடுத்திடுங்க ள்.*

*|v28*

*மனமுடைந்த ஒரு தாயிடமிருந்து வந்த ஒரு கடிதத்தை உங்களோடு நான் பகிர் ந்துகொள்கிறேன். அவளது குமரப்பருவ மகன் பரிசுத்த ஆவியை இழந்து சபை யின் நிகழ்ச்சிகளை தவிர்க்க ஆரம்பித்தான். இது எப்படி நிகழ்ந்ததென அவள் விளக்குகிறாள்: "எனது மகனின் குமரப்பருவம் முழுவதிலும் நான் கவலைய டைந்து, வன்முறையான ஏராளமான வீடியோ விளையாட்டுகளை அவன் வி ளையாடுவதை நிறுத்த நான் முயற்சித்தேன். எனது கணவரிடம் நான் அதைப் பற்றிப் பேசி, இந்த விளையாட்டுக்களைப்பற்றி எச்சரிக்கப்பட்டிருந்த என்சை ன் பத்திரிகையிலும் செய்தித்தாள்களிலும் வெளியான கட்டுரைகளைக் காட் டினேன். அதில் தவறொன்றுமில்லை என என் கணவர் நினைத்தார். நமது மக ன் போதைப் பொருட்கள் எதையும் பயன்படுத்தவில்லை என்பதால் கவலைப் படுவதை நான் நிறுத்தவேண்டுமென அவர் சொன்னார். விளையாட்டுக் கருவி களை நான் மறைத்து வைத்து, எனது கணவர் அதை அவனிடம் திருப்பிக் கொ டுத்துவிடும் சமயங்கள் உண்டு. அதற்காக சண்டைபோடுவதைவிட விட்டுக் கொடுத்துவிடுவது எளிதாக ஆரம்பமானது. இந்த விளையாட்டுக்கள் போதை ப் பொருட்களைப்போல அடிமைத்தனமென உண்மையிலேயே நான் நினைத் தேன். இதை அனுபவித்துக்கொண்டிருக்கும் பிற பெற்றோருக்கு அதைத் தடுக் க நான் எதையும் செய்வேன்".*

*|v29*

*சகோதர சகோதரிகளே, எதைப்பற்றியாவது உங்கள் துணை நன்றாக உணரவி ல்லையெனில் அந்த உணர்ச்சிகளுக்கு மரியாதை கொடுங்கள். எதையுமே சொல்லாமலோ செய்யாமலோ எளிதானவற்றை நீங்கள் செய்யும்போது அழி வுக்கேதுவான பழக்கத்தை நீங்கள் வளரவிடுகிறீர்கள்.*

|v30

திருமணத்திற்கு அவர்கள் தயாராகும் நேரம் வரும்வரை பாலியல் உறவுகளை ஒத்திப்போடுமாறு தங்களின் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதால் மிகுந்த மனவேதனையை பெற்றோர் தடுக்க முடியும். முதிர்வடைவதற்கு முன்பே ஒரு பெண் தோழியுடனோ ஆண் தோழனோடோ உறவுகொள்வது அபாயகரமானது. ஒரு ஜோடியாக மாறுவது உணர்வு பூர்வமான நெருக்கத்தை உருவாக்கி, எப்போதுமே உடல் நெருக்கத்திற்கு நடத்துகிறது. இதன் விளைவைப்பற்றி சாத்தானுக்குத் தெரியும். இதை அவன் தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறான். வாலிபர்களை ஊழியம் செய்வதிலிருந்து விலக்கவும், ஆலயத் திருமணங்களைத் தடுக்கவும் அவனால் முடிந்த எதையும் அவன் செய்வான்.

|v31

சாத்தான் சாதிப்பதற்கு முன் துணிவுடன் பெற்றோர் பேசுவதும் குறுக்கிடுவதும் மிக முக்கியமானது. “நெறி ஒழுக்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களில், ஒரு எச்சரிக்கையின் குரலை உயர்த்த நமக்கு உரிமையும் பொறுப்புமிருக்கிறது” என தலைவர் பாய்ட் கே. பேக்கர் நமக்குக் கற்றுக்கொடுத்தார்.

|v32

நடு இரவில் எதுவும் நல்லது நடப்பதில்லை என நான் எப்போதுமே நம்புகிறேன். இரவில் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வர எதிர்பார்க்கப்படுகிறார்களென்பதை வாலிப மக்கள் தெரிந்திருக்கவேண்டும்.

|v33

தங்களின் பிள்ளைகள் வீட்டிற்கு திரும்பிவரும்வரை பெற்றோர் விழித்திருந்து காத்திருப்பதில் ஒரு மகத்தான ஞானம் அங்கே காணப்படுகிறது. தங்களின் மாலை நேரத்தைப்பற்றி விசாரிக்கவும், முத்தமிட்டு இரவு படுக்கைக்கு செல்லவும் தங்களின் பெற்றோர் காத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறியும்போது வாலிபப் பையன்களும் வாலிபப் பெண்களும் நல்ல தீர்மானங்களை எடுப்பார்கள்.

|v34

அநேக கலாச்சாரங்களில் பொதுவாயிருக்கிற ஒரு பழக்கத்தைப்பற்றிய எனது தனிப்பட்ட கருத்துக்களை நான் சொல்கிறேன். இரவில் வெளியில் தங்கிவிடுவது அல்லது ஒரு நண்பரின் வீட்டில் தங்கிவிடுவது என்பதை நான் குறிப்பிடுகிறேன். வெளியில் தங்கிவிடுவதால் முதல் தடவையாக ஞானவார்த்தை அல்லது கற்புடைமையின் பிரமாணத்தை அநேக இளம் பிராயத்தினர் மீறினார்கள் என்பதை ஒரு ஆயராக நான் கண்டுபிடித்தேன். வீட்டிற்கு வெளியே இரவு நேரத்தை அவர்கள் கழிக்கும்போது முதன் முறையாக அவர்கள் ஆபாசப் படம் பார்ப்பதுவும், முதன் முறையாக காவல் நிலையத்திற்குப் போவதும் எப்போதுமே நடைபெறுகிறது.

|v35

நமது ஆதிக்கத்திலிருந்து தூரமாக நமது பிள்ளைகள் போகும்போதும், நடு இரவில் அவர்களின் பாதுகாப்புகள் பலவீனப்படும்போதும், ஒரே வயதுப்பிரிவினரின் அழுத்தம் மிக வலிமையாயிருக்கிறது. இரவின் நிகழ்ச்சிகளில் எப்போதாவது நீங்கள் சமாதானமாக உணரவில்லை என்றால் உள்ளிருந்து வருகிற எச்சரிக்கையின் குரலுக்கு பதிலளிக்க பயப்படாதீர்கள். உங்கள் விலையேறப்பெற்ற பிள்ளைகளைப் பாதுகாக்கும் நிலை வரும்போது எப்போதுமே ஜெபத்துடனிருங்கள்.

|v36

துணிச்சலான பிள்ளை வளர்ப்பு எப்போதுமே முடியாது என்று சொல்வதாக இருக்காது. தற்கால தீர்க்கதரிசிகளின் ஆலோசனைக்கு சரி என்று சொல்வதற்கும் பெற்றோருக்கு துணிவிருக்கவேண்டும். நமது வீடுகளில் நீதியான மாதிரிகளை ஏற்படுத்த நமது சபைத் தலைவர்கள் நமக்கு ஆலோசனையளித்திருக்கிறார்கள். நமது வாலிப  பிள்ளைகளை பாதுகாக்க வல்லமை கொண்ட ஐந்து அடிப்படை பழங்கங்களைக் கருத்தில் கொள்ளுங்கள்: குடும்ப ஜெபம், குடும்பமாக வேதம் வாசித்தல், குடும்ப இல்ல மாலை, குடும்பமாக உணவருந்துதல், ஒவ்வொரு பிள்ளையோடும் வழக்கமாக நேர் காணல் நடத்துதல்.

|v37

அவர்கள் என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும் அவர்களை ஒன்றுசேர்த்து ஒரு குடும்பமாக முழங்கால்படியிட வைப்பதற்கு துணிவிருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும், தொலைக் காட்சியையும் கணிணியையும் அணைத்துவிட்டு உங்கள் குடும்பம் வேதப் புத்தகங்களைப் படிக்க வைக்க துணிவிருக்க வேண்டும். திங்கட்கிழமை மாலையை உங்கள் குடும்பத்திற்காக ஒதுக்கி வைக்க அந்த மாலையின் பிற அழைப்புகளை தள்ளி வைக்க துணிவிருக்கவேண்டும். இரவு உணவிற்கு உங்கள் குடும்பம் வீட்டிலிருக்கும் மற்ற நிகழ்ச்சிகளை தவிர்க்க துணிவும் மன உறுதியுமிருக்கவேண்டும்.

|v38

ஒரு மகன் அல்லது மகளை நாம் ஆதிக்கம் செலுத்த மிக ஆற்றல்மிக்க வழிகளில் ஒன்று அவர்களோடு தனிப்பட்ட நேர்காணல் காண்பது. அவர்கள் சொல்வதை மிகக் கவனமாகக் கேட்பதால், அவர்களின் உள்ளத்தின் விருப்பங்களை நாம் கண்டுபிடித்து, நீதியான இலக்குகளை அமைக்க அவர்களுக்கு உதவலாம், அவர்களைப்பற்றிய நாம் பெற்ற ஆவிக்குரிய கருத்துக்களை அவர்களோடு பகிர்ந்துகொள்ளலாம். ஆலோசனையளிப்பதற்கு துணிவிருக்கவேண்டும்.

|v39

*ஒவ்வொரு வீட்டிலும் இந்த ஐந்து நீதியான மாதிரிகள் தொடர்ந்து பழக்கத்தி லிருந்தால் தழைத்துவரும் தலைமுறை எவ்வாறிருக்குமென கற்பனை செய்ய முயற்சியுங்கள். ஏலாமானின் சேனையைப்போல நமது இளம் பிராயத்தினர் தோற்கடிக்க முடியாதவர்களாயிருப்பார்கள் (ஆல்மா 57:25--26 பார்க்கவும்).*

|v40

*பிற்காலத்தில் குமரப்பருவத்தினருக்கு பெற்றோராயிருப்பது ஒரு பெரிய தாழ் மையான நியமனமாயிருக்கும். சாத்தானும் அவனைப் பின்பற்றுபவர்களும் இ ந்த தலைமுறையை அழித்துவிட முயற்சிக்கிறார்கள். அவர்களை வளர்த்து வரு வதற்கு வீரமுள்ள பெற்றோர்களை கர்த்தர் நம்பியிருக்கிறார். "பெற்றோரே, ப லங்கொண்டு திடமனதாயிருங்கள்; திகையாதிருங்கள்" (யோசுவா 1:9). தேவ ன் உங்கள் ஜெபங்களைக் கேட்கிறார், அவைகளுக்கு பதிலளிப்பார். துணிச்ச லான  பெற்றோரை கர்த்தர் ஆதரிக்கிறார், ஆசீர்வதிக்கிறார் என நான் சாட்சி யளிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்.*

|v41

*குறிப்புகள்*

|v42

1.

|v43

*"குடும்பம்: உலகத்திற்கு ஒரு பிரகடனம்," லியஹோனா, அக்டோபர் 2004, 4 9.*

|v44

2.

|v45

Joe J. Christensen, "Rearing Children in a Polluted Environment," *Ensign*, Nov. 1993, 11.

|v46

3.

|v47

Robert D. Hales, “With All the Feeling of a Tender Parent: A Message of Hope to Families,” *Liahona*, May 2004, 90.

|v48

4.

|v49

Boyd K. Packer, “Our Moral Environment,” *Ensign*, May 1992, 67.

|v50

*லியஹோனா*

|v51

*நவம்பர் 2010*